# சங்கை பொருந்திய ஷ.்.பான் பிறை 15 உம் தெளிவு பெற வேண்டிய முக்கிய விடயங்களும்

வெளியீடு

Jamia Al-Imam Al-Asha^ri Arabic College
No 10A, Fredrica Rd, Wellawatta,
Colombo 06. Sri Lanka.
Tel : 011 7 446 336

நான்காம் வெளியீடு
ஷ.்.பான் 1439 - ஏப்ரல் 2018

இஸ்லாத்தில் பிரார்த்தனை செய்வதின் சிறப்பு பற்றி பரிசுத்தமான அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான்.

وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌۖ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِۖ
فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ {١٨٦}

விளக்கம் :

"உங்களிடம் அடியார்கள் அழ்ழாஹ்வையும், அவனது தன்மைகளையும் பற்றி கேட்டால் அழ்ழாஹ் அனைத்தையும் அறிந்தவன் மேலும் அவனைப் பிரார்த்திப்போரின் பிரார்த்தனையை கேட்பவன். அதாவது அழ்ழாஹ் அவருடைய தேவையை நிறைவேற்றி கொடுப்பான் அல்லது அந்த அடியான் மார்க்க ரீதியான நலவொன்றை பிரார்த்தித்திருந்தால் அந்த அடியானுக்கு (ஸவாபு) நற்கூலி வழங்குவான்."

(அத்தியாயம் : அல்-பகரஹ், வசனம் : 186)

அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் " الدعاء مخ العبادة "

(அறிவித்தவர் : இமாம் அத்-திர்மிதீ رضي الله عنه )

இதன் கருத்தாவது துஆவின் அந்தஸ்து இபாதத்களிலே உயர்வானதாகும். ஏனெனில் ஒரு மு.ஃ.மினான அடியாரின் பிரார்த்தனையில் அழ்ழாஹ் தான் அனைத்தையும் ஆட்சி செய்பவன், அனைத்தின் மீதும் வல்லமையுடையவன் மேலும் அவனுக்கு அழ்ழாஹ் செய்த அதிக அருட்கொடைகளை ஏற்றுக் கொள்கிறான்

ஏன்பதும் உள்ளடங்கியுள்ளது.

## இரவில் மேற்கொள்ளப்படக்கூடிய ஸுன்னத்தான அமல்களின் சிறப்பு

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள் :
“பர்ளான தொழுகையை அடுத்து சிறப்பான தொழுகை இரவுத் தொழுகையாகும்.”
(அறிவித்தவர் : இமாம் முஸ்லிம் رضي الله عنه)

அல்லாஹ்வுக்காக இரவில் நின்று வணங்குவது அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் நமக்கு ஆர்வமூட்டிய ஸுன்னத்தான வணக்கங்களில் ஒன்றாகும். இரவில் மேற்கொள்ளக்கூடிய தொழுகை, மற்றும் திக்ர், இஸ்தி.:.பார், அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்லுதல், அல்-குர்ஆன் ஓதுதல் ஆகியவற்றுக்கு இரவில் நின்று வணங்குதல் என்று சொல்லப்படும்.
கடமைகளை நிறைவேற்றி பாவங்களை தவிர்ந்து நடப்பதுடன் இந்த இரவில் வணக்கங்களில் ஈடுபடுவதின் மூலம் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

## , ஷ∴பான் மாதத்தின் பிறை 15 ஆம் இரவும் அது சம்பந்தமாக கூறப்பட்டு வந்த விடயங்களும்

ஷ.்.பானின் பிறை 15 ஆம் இரவு கண்ணியமிக்க பரகத் பொருந்திய ஓர் இரவாகும். இவ்விரவை தொழுகை, திக்ர் அல்-குர்ஆன் ஓதுதல் போன்ற நல்லமற்களின் மூலம் உயிர்பிப்பதும், இவ்விரவில் நின்று வணங்குவதும், மார்க்கம் நல்லதாக கருதிய நன்மை தரக்கூடிய விடயமாகும். இது தொடர்பாக அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் صلى الله عليه وسلم அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். "ஷ.்.பான் மாதத்தின் பிறை 15 ஆம் இரவு வந்து விட்டால் அதன் இரவில் நின்று வணங்குங்கள் மேலும் அதன் பகலில் நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்."

(அறிவித்தவர் : இமாம் இப்னு மாஜஹ்رضي الله عنه)

அழ்ழாஹ்வின திருப்பொருத்தம் பெற ஏனைய இரவு காலங்களில் கடமைகளை நிறைவேற்றி, ஹறாம்களை தவிர்ந்து அவ்விரவுக் காலங்களை கழிப்பதைப் போல் இந்த ஷ.்.பான் மாதத்தின் பிறை 15 ஆம் இரவிலும் தக்வாவுடன் இருப்பது மிக சிறந்த அமலாகும். ஏனெனில் தக்வா என்பது இந்த அழிந்து செல்லக்கூடிய துன்யாவிலே ஒரு மனிதனுக்கு வழங்கப்படக்கூடிய ஒரு சிறந்த அருளாகும்.

அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான்

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ {١٠٢} ,

விளக்கம் :

"ஈமான் கொண்டோரே அழ்ழாஹ் ஏவிய அனைத்தையும் நிறைவேற்றவும் இன்னும் அவன் தடுத்த அனைத்துவிடயங்களையும் தவிர்ந்து நடக்கவும். மேலும் அழ்ழாஹ்வையும், அவன் தூதரையும் முறையாக நம்பிய உண்மை முஸ்லிமாக மரணிக்கும் வரை இஸ்லாத்தின் மீது நிலைத்திருங்கள்."

(அத்தியாயம் : ஆலு இம்ரான், வசனம் : 102)

تقــــــــــــــــــــوى الله (தக்வழ்ழாஹ்) என்பதின் கருத்து : அழ்ழாஹ்வால் கடமையாக்கப்பட்ட விடயங்களை எடுத்து நடப்பதும் மேலும் அவன் தடுத்த பாவகாரியங்களை தவிர்ந்து நடப்பதுமாகும். எனவே ஏனைய இரவுகளில் நன்மையான காரியங்களில் ஈடுபடுவதைப் போன்று இந்த ஷ.்.பான் மாதத்தின் பிறை 15 ஆம் இரவிலும் நன்மையான காரியங்களில் மும்முறமாக ஈடுபடுவது அவசியமாகும். மேலும் ஒவ்வொரு மனிதனும் தனக்கு மரணம் சமீபத்திலே இருப்பதாகவும் மேலும் மண்ணறைகளில் இருந்து கேள்வி கணக்கிற்காக மஹ்ஷரிலே ஒன்று திரட்டப்பட்டு விசாரிக்கப்படுவோம் என்பதையும் சிந்திப்பது அவசியமாகும். அழ்ழாஹ்வையும் அவனது தூதரையும் ஈமான் கொண்டவர்கள் வெற்றிபெறுவார்கள். அழ்ழாஹ்வை ஏற்காமல் புறக்கணித்தவர்கள் நஷ்டமடைவார்கள்.

## ’ஷ:பான் பிறை 15 ஆம் இரவு சம்பந்தமாக அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறியதாக இட்டுக்கட்டப்பட்ட சில பொய் வதந்திகளுக்கான மறுப்புரைகள்

மக்களுக்கு மத்தியில் பரவலாக காணப்படக்கூடிய மார்க்கத்திற்கு முரணான அடிப்படையற்ற பிழையான சில விடயங்களை இங்கே சுட்டிக்காட்டி தெளிவு படுத்துவது மிக அவசியமாகும். அந்தவகையிலே அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் சொல்லாத அவர்கள் பெயரில் இட்டுக்கட்டப்பட்ட பல போலி ஹதீஸ்கள் உள்ளன.

உதாரணம் “ரஜப் அழ்ழாஹ்வுடைய மாதம், ஷ.்.பான் எனது மாதம், றமழான் எனது உம்மத்தின் மாதம்.” இது அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் சொல்லாத ஒரு கட்டுக் கதையாகும்.

மேலும் “ரஜப் இஸ்தி.்.பாருடைய மாதம், ஷ.்.பான் அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது ஸலவாத் சொல்லும் மாதம், றமழான் குர்ஆனுடைய மாதம் நீங்கள் முயற்சி செய்யுங்கள் உங்களுக்கு அழ்ழாஹ் அருள் புரிவான்.” என்று கூறப்படுவதும் அழ்ழாஹ் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மீது இட்டுக்கட்டப்பட்ட அடிப்படையற்ற போலி ஹதீஸாகும்.

பொதுவாக சூறா யாஸீனை ஒருவர் சரியாக ஓதும் போது என்ன ஸவாபுகளைப் பெறுவாரோ அதே போன்று இவ்விரவிலும் சூறா யாஸீனை ஓதுபவர் பெற்றுக் கொள்வார். ஆயினும் இவ்விரவிலே குறிப்பாக சூறா யாஸீன் ஓதுவது விஷேட நன்மை தரும் அமல் என அல்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறவில்லை என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஷ.ஃ.பான் பிறை 15 ஆம் நாளில் நோன்பு நோற்றல் இது சம்மந்தமாக இமாம் ரமலி رضي الله عنه அவர்கள் தனது பதாவா எனும் கிரந்தத்திலே பின்வருமாறு கூறியுள்ளார்கள். ஷ.ஃ.பான் பிறை 15 ஆம் நாளில் நோன்பு நோற்பது ஸுன்னத்தாகும். அது மற்றுமன்றி அய்யாமுல் bபீல் என்று சொல்லப்படக்கூடிய பிறை 13, 14, 15 ஆகிய தினங்களிலே தான் இந்த ஷ.ஃ.பான் பிறை 15 ஆம் தினமும் உள்ளடங்குகின்றது. எனவே இத்தினங்களில் நோன்பு நோற்பது ஸுன்னத் என்ற வகையில் ஷ.ஃ.பான் பிறை 15 ஆம் தினத்தில் நோன்பு நோற்பது ஒரு தவறான விடயமல்ல.

### ஷ.ஃ.பான் பிறை 15 ஆம் தினத்தின் இரவில் அல்-குர்ஆன் அருளப்படவில்லை என்பது சம்பந்தமான ஒரு தெளிவுரை

முதலாவதாக "فيها يفرق كل أمر حكيم" என்ற வசனமானது ஷ.ஃ.பான் பிறை 15 ஆம் இரவு பற்றி பேசவில்லை

ஏன்பதை புரிந்து கொள்ள வேண்டும். அல்-குர்ஆன் இவ்விரவிலே தான் அருளப்பட்டதென மக்களுக்கு மத்தியில் பரவிவரும் இக்கருத்து பிழையான ஒரு கருத்தாகும். அல்லாஹ் மலக்குமார்களுக்கு இவ்வருடத்திலிருந்து அடுத்த வருடம் வரை அடியார்களுக்கு நிர்ணயித்துள்ள மௌத், ஹயாத், பிறப்பு, ரிஸ்குகள் மேலும் அது போன்ற நிகழ்வுகளின் விபரங்களை அறிவித்துக் கொடுக்கும் இரவானது புனித "லைலதுல் கத்ர்" இரவாகும் என்பதே சரியானதாகும். அல்-குர்ஆன் முதல் வானத்திலே "பைதுல் இஸ்ஸா" எனும் இடத்திலே ஷ.ஃபான் பிறை 15 ஆம் இரவில் இறங்கியதாக யாரும் உறுதி கொள்ளலாகாது. மாறாக அல்-குர்ஆன் முதல் வானத்திலே இருக்கும் "பைதுல் இஸ்ஸா" எனும் இடத்திற்கு அருளப்பட்டது புனிதமிகு "லைலதுல் கத்ர்" இரவில் நடைபெற்றதாகவே பின்வரும் அல்-குர்ஆன் வசனம் குறிப்பிடுகிறது.

அல்லாஹ் தஆலா கூறியுள்ளான்

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةِ الْقَدْرِ {١}

விளக்கம் :

"நிச்சயமாக நாங்கள் குர்ஆனை "லைலதுல் கத்ர்" உடைய இரவிலே இறக்கிவைத்தோம்"

(அத்தியாயம் : அல் கத்ர், வசனம் : 01)

மேலும் பின்வரும் வசனமும் மேற்கூறப்பட்ட நிகழ்வையே மென்மேலும் தெளிவுபடுத்துகின்றது.

,
அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான்.

إِنَّا أَنْزَلْنَاهُ فِي لَيْلَةٍ مُبَارَكَةٍ ۚ إِنَّا كُنَّا مُنْذِرِينَ {٣}

விளக்கம் :

“றமழான் மாதத்தில் லைலதுல் கத்ர் இரவிலே முதல் வானிலுல்ல “பைதுல் இஸ்ஸா” வுக்கு அல்-குர்ஆனை ஒட்டுமொத்தமாக இறக்கிவைக்கும்படி அழ்ழாஹ் கட்டளையிட்டான். நிச்சயமாக அழ்ழாஹ் குர்ஆனை இறக்கிவைத்தான். அதிலே மார்க்க சட்டங்களும், உபதேசங்களும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதும், வாக்களிப்புகளும், எச்சரிகைகளும் உள்ளன.”

(அத்தியாயம் : அத்துஹான், வசனம் : 03)

## ஷஃபான் பிறை 15 ஆம் இரவில் தொழக்கூடிய தொழுகையின் எண்ணிக்கை எங்கும் குறிப்பிட்டு கூறப்படவில்லை அது சம்பந்தமாக ஒரு தெளிவுரை

இவ்விரலே பிரத்தியேகமான அமைப்பில் 100 ரக்அத்கள் அல்லது 50 ரக்அத்கள் அல்லது 12 ரக்அத்கள் தொழுவதற்கு மார்க்கத்தில் எந்த ஒரு அடிப்படை ஆதாரமும் கிடையாது. மேலும் இது அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்களின் வாயிலாக பதிவிடப்படவுமில்லை. இவ்விரவிலே நன்மையை நாடக்கூடிய ஒரு முஸ்லிம் தான் விரும்பிய அளவு ரக்அத்களை தொழுது கொள்ளலாம். இத்தனை ரக்அத்கள்தான் தொழப்பட வேண்டுமென எண்ணிக்கை

குறிப்பிட்டு கூறப்படவில்லை. ஹதீஸ் கலை வல்லுனர் இமாம் அப்துழ்ழாஹ் அல்-ஹுமாரி رضي الله عنه "ஹுஸ்னுல் பயான் பீ லைலதிந் நிஸ்பி மின் ஷ.்.பான்" எனும் கிரந்தத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்கள். "ஸஹீஹான" அமைப்பிலோ அல்லது பலவீனமான அமைப்பிலோ இந்த இரவில் தொழப்படும் தொழுகையின் எண்ணிக்கை தொடர்பாக எந்த குறிப்பும் காணப்படவில்லை. மாறாக இட்டுக்கட்டப்பட்ட பொய்யான செய்திகளே காணப்படுகின்றன.

## பிரார்த்தனை, அழ்ழாஹ்வின் ஏற்பாட்டை தட்டி விடாது மேலும் அழ்ழாஹ்வுடைய நாட்டம் ஆரம்பமற்றது, அது மாற்றமடையாது என்பது பற்றிய ஒரு தெளிவுரை

அழ்ழாஹ்வுடைய நாட்டம் எனும் தன்மை அடியார்களின் செயல்கள், சொற்கள் அனைத்தையும் அடையவளைத்துக் கொள்ளக்கூடியது. இவ்வுலகிலே அழ்ழாஹ்வின் நாட்டம் இன்றி மேலும் அவன் அறியாமல் அவன் படைக்காமல் அவனின் ஏற்பாடின்றி எதுவும் நடக்காது. ஆழ்ழாஹ்வின் நாட்டத்தின் பிரகாரமே அடியார்களின் நாட்டம் கூட உண்டாகிறது. இது தொடர்பாக பின்வருமாறு அழ்ழாஹ் தஆலா கூறியுள்ளான்

وَمَا تَشَاءُونَ إِلَّا أَنْ يَشَاءَ اللَّهُ رَبُّ الْعَالَمِينَ {٢٩}

விளக்கம்:

"படைப்பனைத்தையும் படைத்து ஆட்சி செய்யும்

அழ்ழாஹ்வின் நாட்டமின்றி யாராலும் எதையும் நாடவே முடியாது”.

இதுவெ முஸ்லிம்களின் நம்பிக்கைக் கோட்பாடாகும். நல்ல விடயங்கள், கெட்ட விடயங்கள், வணக்கங்கள், பாவங்கள், அழ்ழாஹ்வை ஈமான் கொள்வது, அவனை மறுப்பது யாவும் அழ்ழாஹ்வின் நாட்டப்படியே நடைபெறுகின்றன. ஏனெனில் அழ்ழாஹ்வை தவிர எதனையும் படைக்கக்கூடியவன் யாரும் கிடையாது. அழ்ழாஹ்வின் நாட்டத்திற்கு ஆரம்பமோ, முடிவோ கிடையாது. அதில் மாற்றங்களோ, நிலைமாறுதல்களோ ஏற்படமாட்டாது. இவ்வாறுதான் அழ்ழாஹ்வுடைய அறிவு, வல்லமை போன்ற தன்மைகளும் மாற்றம் பெறமாட்டாது. மாற்றம் பெறுதல் என்பது படைப்புக்களின் தன்மையாகும். எனவே அழ்ழாஹ்வுடைய யதார்த்தத்திலோ, தன்மைகளிலோ மாற்றம் ஏற்படுவதில்லை. அவ்வாறு அழ்ழாஹ்வுடைய தன்மைகளில் மாற்றம் ஏற்படுவது புத்தி ஏற்றுக்கொள்ளாத, சாத்தியமற்ற ஒன்றாகும்.

அழ்ழாஹ்வுடைய தன்மைகளோ, அவனுடைய அறிவோ மாற்றம் அடையக்கூடியது என எந்த மனிதனும் உறுதி கொள்ளக்கூடாது. அவன் ஆரம்பமில்லாத தன்மையிலே ஒரு விடயத்தை அறியாமல் இருந்து பின்னர் அதனை புதிதாக அறிந்து கொண்டான் என எவ்வாறு நம்பிக்கைக் கொள்ளப்படமாட்டாதோ அதே போன்று அவன் ஆரம்பமில்லாத தன்மையிலே ஒரு விடயத்தை நாடாமல்

இருந்து பின்னர் புதிதாக நாடினான் எனவும் நம்பிக்கை கொள்ளக்கூடாது.
பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனையைக் கொண்டு அல்லது ஸதகா கொடுப்பவரின் ஸதகாவைக் கொண்டு அல்லது நேர்ச்சை வைப்பவரின் நேர்ச்சையைக் கொண்டு அழ்ழாஹ்வுடைய நாட்டம் மாற்றமடைவதில்லை.

"அவன் நாடியவை நடைபெறும் அவன் நாடாதவைகள் நடைபெறவேமாட்டாது."

இது ஸுனன் அபீ தாவுத் எனும் கிரந்தத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. ஆரம்பமில்லாத தன்மை கொண்ட அழ்ழாஹ், எது உண்டாகுவதை அறிந்தவனாகவும், நாடியவனாகவும் உள்ளானோ அது கட்டாயம் நடைபெறும். மேலும் எது ஏற்படாது என ஆரம்பமில்லாத தன்மையிலே அறிந்துள்ளானோ அது கட்டாயம் நடைபெறாது. அதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸ் அமைந்துள்ளது.

"நிச்சயமாக நேர்ச்சை வைப்பது, அழ்ழாஹ்வின் ஏற்பாட்டில் எதையும் மாற்றிவிடமாட்டாது.

(அறிவித்தவர்: இமாம் இப்னு ஹிப்பான் رضي الله عنه , இமாம் அஹ்மத் رضي الله عنه.)

மேலும் இது தொடர்பாக ஆதாரபூர்வமான ஒரு ஹதீஸ் வந்துள்ளது. இந்த ஹதீஸை "ஸவ்பான் رضي الله عنه" என்பவர் வாயிலாக இமாம் முஸ்லிம் رضي الله عنه அவர்கள்

அறிவித்துள்ளார்கள். அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் அவர்கள் கூறினார்கள்: “நான் என்னுடைய றப்பிடம் மூன்று விடயங்களை வேண்டினேன் . அவற்றில் இரண்டை ஏற்றுக்கொண்டான். ஒன்றை ஏற்றுக்கொள்ளவில்லை.” இன்னுமொரு அறிவிப்பில் பின்வருமாறு வந்துள்ளது “அல்லாஹ்வுடைய நாட்டம், துஆக் கேட்பவரின் துஆவைக் கொண்டு மாற்றமடைவதில்லை.” மேலும் அல்லாஹ் ஆரம்பமில்லாத தன்மையில் அவன் நாடிய, அவன் ஏற்பாடு செய்தவைகள் மட்டுமே நடைபெறும் என்பதற்கு தெளிவான பல ஆதராங்கள் இருக்கின்றன. அல்லாஹ் அவனுடைய நாட்டத்தை ஒருவருக்காக மாற்றுவதாக இருந்தால் எங்கள் அன்புக்குரிய முஹம்மத் ﷺ அவர்களுக்காக மாற்றிக் கொடுத்திருப்பான். எனவே மேற்கூறப்பட்டவையே அஹ்லுஸ் ஸுன்னஹ் வல்ஜமாஅத்தினரின் அதாவது முஹம்மத் ﷺ அவர்களுடைய தோழர்கள், அவர்களுக்குப் பின்னால் வந்தோர்கள் மேலும் அவர்களைப் பின்பற்றியோரின் நம்பிக்கை கோட்பாடாகும்.

## " يَمْحُو اللَّهُ مَا يَشَاءُ وَيُثْبِتُ ۖ وَعِنْدَهُ أُمُّ الْكِتَابِ {٣٩} " எனும் அத்தியாயம் அர் ரஃது 39 ஆம் வசனத்தின் சரியான விளக்கம்

அல்லாஹ் தஆலா அல்-குர்ஆனிலே அருளியிருக்கக்கூடிய சட்டங்களில் சிலதை அல்லாஹ் மாற்றி வேறு சட்டங்களை அருளுவான். இன்னும் சில

சட்டங்களில் எவ்வித மாற்றமும் செய்யாமல் அதை அவ்வாறே தரிபடுத்தி வைப்பான். இவை அனைத்துமே அழ்ழாஹ்வின் வஹ்யின் பிரகாரமே நடைபெறும். அழ்ழாஹ் தனது நாட்டத்தை பிராத்தனைக்காகவோ அல்லது ஸதகாவுக்காகவோ அல்லது நேர்ச்சைக்காகவோ மாற்றுவதில்லை என்பதே உண்மையாகும்.

" وَعِنْدَهُ أُمُّ الْكِتَابِ {٣٩} " என்பதின் விளக்கம்: நாஸிஹ் மன்ஸூஹ் ஆகிய அனைத்துமே லவ்ஹுல் மஹ்பூலிலே பதிவிடப்பட்டுள்ளது

" كُلَّ يَوْمٍ هُوَ فِي شَأْنٍ {٢٩} " எனும் அத்தியாயம் அர் றஹ்மானின் 29 ஆம் வசனத்தின் விளக்கத்தை அழ்ழாஹ்வின் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள். “பாவத்தை மன்னிப்பான். கஷ்டத்தை நீக்குவான். ஒரு கூட்டத்தினரை உயர்த்துவான். மற்ற கூட்டத்தினரை தாழ்த்துவான்.” இதனை இமாம் இப்னு மாஜஹ், இப்னு ஹிப்பான், பைஹகீ رحمهم الله ஆகியோர்கள் அறிவித்துள்ளனர். மேலும் இது மக்களிடம் பரவலான " سُبْحَانَ الَّذِيْ يُغَيِّرُ وَلَا يَتَغَيَّرُ " எனும் அவர்களது கூற்றுக்கு நேர்படுகின்ற விளக்கவுரையுமாகும். அதாவது இதன் விளக்கம் எந்த மாற்றமுமடையாதவனாக பிற பொருளில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய அழ்ழாஹ்வை படைப்புகளுக்கு ஒப்பாகுவதை விட்டும் பரிசுத்தப்படுத்துகின்றேன். இது

ஒரு அழகிய வார்த்தை. காரணம் மாற்றங்கள் என்பது படைப்புக்களிலே ஏற்படும். மாறாக அழ்ழாஹ்வுடைய யதார்த்தத்திலே ஏற்படுவதில்லை. அடியார்களை நோயில் இருந்து ஆரோக்கியத்திற்கும், கெடுதியிலிருந்து நலவுக்கும், ஏழ்மையிலிருந்து செல்வத்திற்கும் அழ்ழாஹ் தன்னுடைய ஆரம்பமில்லாத, முடிவற்ற நாட்டத்தின் பிரகாரம் மாற்றுகிறான் என நமக்கு புலப்படுகின்றது. மாற்றங்கள் என்பது படைப்புக்களின் நிலமைகளில் ஏற்படக்கூடியதாகும். அவை அழ்ழாஹ்வுடைய நாட்டத்திலோ, அறிவிலோ ஏற்படுவதில்லை. ஓர் அடியான் அழ்ழாஹ்விடம் தன் நோயை குணப்படுத்துமாறு பிரார்த்தனை செய்து அவருடைய பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட்டால் அழ்ழாஹ்வுடைய நாட்டத்திற்கு என்னுடைய பிரார்த்தனை நேர்பட்டு விட்டது எனக் கூறப்படும். இன்னும் அவருடைய பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் அழ்ழாஹ் இவருக்கு நிவாரணத்தை நாடவில்லை எனக் கூறப்படும். இவருக்கு நிவாரணம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் இவர் இவ்விரு நிலைமைகளிலும் தன் பிரார்த்தனை மூலம் பிரயோசனம் அடைவார். ஏனெனில் பிரார்த்தனை மூலம் இவர் நன்மைகளை பெறுகிறார்.

எச்சரிக்கை

சில ஊர்களில் ஷ.ஃ.பான் பிறை 15 ஆம் இரவிலே பள்ளிவாசல்களில் அல்லது வீடுகளில் ஒன்று கூடி பி ன் வ ரு ம் து ஆ வி னை

اللهم إن كنت كتبتني عندك في أم الكتاب شـــــقيا أو محروما أو مطرودا أو مقترا علي في الرزق فامح اللهم شـــقاوتي وحرماني وطردي وإقتار رزقي واكتبني عندك من السعداء

ஓதும் வழமையைக் கொண்டுள்ளனர். இதனை முஹம்மத் ﷺ அவர்களோ ஸஹாபாக்களில் எவருமோ ஓதியதாக ஆதாரபூர்வமாக நிரூபணமாகவில்லை. இதனைப் பற்றி இமாம் அல்-பைஹகீ رضـــــي الله عنه "அல்-கதர்" எனும் கிதாபில் குறிப்பிட்டுள்ளார்கள். இது உமர், இப்னு அப்பாஸ், முஜாஹித் رضـــــــوان الله عليهم மேலும் அஸ்ஸலபுஸ்ஸாலிஹூன்கள் ஆகிய எவரைத் தொட்டும் ஆதாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. நம்பிக்கை கோட்பாட்டுக்கு முரணான ஒரு கருத்தை ஊக்குவிக்க செய்கின்றது. அனைத்து முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கை யாதெனில், அழ்ழாஹ் எவர் மூதேவியாக வாழ்ந்து மூதேவியாக மரணிப்பதை நாடியுள்ளானோ, அறிந்துள்ளானோ அவர் அதே நிலமையில் தான் வாழ்ந்து மரணிப்பார். அவர் அதுவன்றி வேறு ஒரு நிலையில் வாழ்ந்து மரணிக்கவே மாட்டார். ஷ.ஃ.பானுடைய மாதத்தின் பிறை 15 ஆம் இரவில் ஓதப்பட்டுவரும் அந்த பிரார்த்தனையை ஓதுவதின் மூலமாக அழ்ழாஹ்வுடைய ஆரம்பமில்லாத தன்மையில் அழ்ழாஹ் நிர்ணயித்திருந்த ஓர் விடயத்தை மாற்றலாம் அதாவது இந்த துஆ மூலம் அழ்ழாஹ் தஆலாவினால்

நாடப்பட்ட மூதேவி ஒருவன் சீதேவியாகலாம். பாவம் செய்யக்கூடியவன் என்று அழ்ழாஹ்வினால் நாடப்பட்ட ஒருவன் நன்மை செய்யக்கூடியவனாக மாறலாம் என்ற ஒரு மோசமான சிந்தனைக்கு இஸ்லாமிய தூய கல்வியை கற்காத ஒருவன் சென்றுவிட நிறைய வாய்ப்புக்கள் இருக்கின்றன.
எனவே இவ்வாறான சிந்தனை யாரிடம் காணப்படுமோ அவருடைய கொள்கையானது மோசமானதாகும். எனவே அவர் உடனடியாக அவருடைய அந்த பிழையான மோசமான சிந்தனையை விட்டுவிட்டு ஷஹாதா கலிமாவை மொழிந்து இஸ்லாத்திற்குல் நுழைவது அவசியமாகும்.

இறுதியாக ஒவ்வொரு மனிதனும் உற்சாகமாகவும், ஆர்வத்துடனும் நன்மைகளை செய்ய விரைவது அவசியமாகும். மேலும் மறுமையில் வெற்றி பெற, இவ்விரவில் உண்மையான தௌபாவில் ஈடுபடுவதும் அவசியமாகும்.

விரும்பியவர்கள் பின்வரும் பிரார்த்தனைகளை ஓதிக் கொள்ளலாம். இவை முஹம்மத் ﷺ அவர்கள் வாயிலாக பதிவிடப்படாத பிரார்த்தனைகளாக இருப்பினும் அடிப்படை இஸ்லாமிய கோட்பாட்டிற்கு எவ்வித முரணையும் ஏற்படுத்தாத தூய அர்த்தங்களைக் கொண்ட துஆவாகும்.

اللهم يا الله يا الله يا الله ، يا حـــــــي يا قيوم يا غفور يا تواب يا هادي يا فتاح يا رزاق يا واسع يا معطي يا معين يا باسـط يا مبدئ يا وهاب يا متين ويا حافظ يا ولي يا كافي يا حسـيب يا أرحم الراحمين يا ذا المن ويا ذا الفضـــل وياذا الجلال والإكرام ويا ذا الطول والإنعام بحق أسمائك الحســـــنى وءاياتك العظمى وبحق اسمك العظيم الأعظم وببركة ليلة النصـف من شعبان المكرم صـل على سـيدنا ومولانا وحبيبنا وشـفيعنا وملاذنا محمدٍ رسـولك ونبيك الأكرم صـــلاة كاملة دائمة تكتبنا بها عندك في هذه الليلة المباركة مغفورين لهم مســـــــعودين معمرين بالخير مرزوقين موفقين للأذكار والطاعات والخيرات والحسنات ومستغنين بفضـلك في الدارين عمن سواك وصل على سيدنا محمد صلاة تكتبنا بها في هذ الليلة من السعداء والصالحين وترزقنا بها في الدارين إيمانا كاملا وكمال اليقين بحق سـيدنا محمد سـيد المرسـلين وإمام المتقين ومحبوب رب العالمين وتكشـــف بها عنا البليات والآفات والعاهات إنك مجيب الدعوات وما ذلك على الله بعزيز ، وصــلى الله على سـيدنا محمد وعلى ءاله وصحبه وسلم.

,

,